# SPORTS DEVELOPMENT AUTHORITY OF TAMILNADU, CHENNAI 84

## PRESS RELEASE

As per the announcement of Hon'ble Chief Minister 2013 – 14 onwards, the State Games for Chief Minister's Trophy State level competitions for Men and Women was conducted by giving high prize money to the first three place winners, in order to further motivate and encourage competitive spirit among sports persons in Tamil Nadu. This year 2016 – 17, the State Games for Chief Minister's Trophy will be conducted in two levels viz., District level and State level. The State level competitions were conducted from 27.12.2016 to 15.02.2017 in various Districts.

| Sl. No. | Discipline | Venue | Date |
|---|---|---|---|
| 1 | Taekwondo | Tiruppur | 27.12.2016 and 28.12.2016 |
| 2 | Handball | Dindigul | 05.01.2017 to 08.01.2017 |
| 3 | Swimming | Chennai | 11.01.2017 and 12.01.2017 |
| 4 | Weight Lifting | Thanjavur | 15.01.2017 to 17.01.2017 |
| 5 | Gymnastics | Chennai | 19.01.2017 to 21.01.2017 |
| 6 | Athletics | Madurai | 21.01.2017 to 23.01.2017 |
| 7 | Judo | Trichy | 25.01.2017 to 27.01.2017 |
| 8 | Beach Volleyball | Nagapattinam | 27.01.2017 to 29.01.2017 |
| 9 | Fencing | Namakkal | Completed before 15th February 2017 |
| 10 | Boxing | Virudhunagar | |

The prize money for first place winners is Rs.1.00 lakh each, 2nd Place winners Rs.75,000/- each and 3rd Place winners Rs.50,000/- each in Taekwondo, Handball, Swimming, Weight Lifting, Gymnastics, Athletics, Judo, Beach Volleyball, Fencing and Boxing.

As per the scheme, the winners of 599 players among Men and Women to be awarded for the Chief Minister's Trophy and they will be awarded Rs.5,66,61,000.00 for prize money in District and State level competitions. The Government had sanctioned a sum of Rs.809.00 lakhs to conduct of the above competitions it included prize money.

The inaugural function and prize money distribution function held at SDAT Aquatic Complex, Chennai on 11.01.2017 at 4.30 P.M. presided by Thiru. K. Pandiarajan, Hon'ble Minister for School Education, Sports and Youth Welfare and he has inaugurated the Swimming competitions in the presence of Dr. Rajendra Kumar, I.A.S., Principal Secretary to Government, Youth Welfare and Sports Development Department. In this event, about 550 players, coaches and team managers participated.

s-d/. Rajendra Kumar
Principal Secretary /
Member Secretary

<u>செய்தி வெளியீடு</u>

2013 – 14 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் அனைத்து விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கவும், அவர்களை விளையாட்டுக்களில் ஈடுபடுத்தவும், மாநில அளவிலான "**முதலமைச்சர் கோப்பைக்கான**" விளையாட்டுப் போட்டியினை நடத்திட ஆணையிட்டார்கள். இந்த விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதன் முக்கிய நோக்கம் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துக் கொண்டு பயன் பெறுவதுமாகும். அதன் அடிப்படையில், 2016 – 17 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியினை மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான போட்டிகள் இருபாலருக்கும் 27.12.2016 முதல் 15.02.2017 வரை கீழ்குறிப்பிட்ட மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

| வ. எண். | விளையாட்டு | நடத்தப்படும் இடம் | தேதி |
|---|---|---|---|
| 1 | டேக்வோண்டோ | திருப்பூர் | 27.12.2016 மற்றும் 28.12.2016. |
| 2 | கைப்பந்து | திண்டுக்கல் | 05.01.2017 முதல் 08.01.2017 வரை |
| 3 | நீச்சல் | சென்னை | 11.01.2017 மற்றும் 12.01.2017 |
| 4 | பளுதூக்குதல் | தஞ்சாவூர் | 15.01.2017 முதல் 17.01.2017 வரை |
| 5 | ஜிம்னாஸ்டிக்ஸ் | சென்னை | 19.01.2017 முதல் 21.01.2017 வரை |
| 6 | தடகளம் | மதுரை | 21.01.2017 முதல் 23.01.2017 வரை |
| 7 | ஜுடோ | திருச்சி | 25.01.2017 முதல் 27.01.2017 வரை |
| 8 | கடற்கரை கையுந்துபந்து | நாகப்பட்டினம் | 27.01.2017 முதல் 29.01.2017 வரை |
| 9 | ஃபென்சிங் | நாமக்கல் | பிப்ரவரி 15 – ம் தேதிக்குள் நடத்தி முடிக்கப்படும். |
| 10 | குத்துச்சண்டை | விருதுநகர் | |

இந்த மாநில அளவிலான விளையாட்டில் முதல் இடம் வென்ற விளையாட்டு வீரருக்கு தலா ரூ.1.00 லட்சமும், இரண்டாம் இடம் வென்ற விளையாட்டு வீரருக்கு தலா ரூ.75,000/–மும், மூன்றாம் இடம் வென்ற விளையாட்டு வீரருக்கு தலா ரூ.50,000/– மும் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் மூலம் 599 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பரிசுத் தொகையாக ரூ.5,66,61,000.00 (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்தி ஆறு லட்சத்து அறுபத்தி ஒன்று ஆயிரம் மட்டும்) பரிசுத் தொகையாக வழங்கப்படவுள்ளது. மேலும், இந்த முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியினை ரூ.809.00 லட்சத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு பரிசுத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை வேளச்சேரி நீச்சல்குள வளாகத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான நீச்சல் விளையாட்டுப் போட்டியினை 11.01.2017 அன்று மாலை 4.30 மணிக்கு மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் துவக்கி வைத்து வெற்றி பெற்ற கீழ்க்காணும் வீரர்கள் / வீராங்கனைகளுக்கு பரிசுத் தொகை வழங்கினார்கள்.

| வ. எண். | விளையாட்டுப் பிரிவு | பெற்ற நிலை | பெயர் மற்றும் மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | 100மீ பட்டர்பிளை – ஆண்கள் | முதலிடம் | சி. எஸ். பி. பிரித்விராஜ், காஞ்சிபுரம் |
| 2 | | 2–ம் இடம் | எம். கௌதம், சென்னை |
| 3 | | 3–ம் இடம் | எம். எஸ். பவன் குப்தா, திருவள்ளூர் |
| 4 | 100மீ பட்டர்பிளை – பெண்கள் | முதலிடம் | முக்தா மல்லா ரெட்டி, சென்னை |
| 5 | | 2–ம் இடம் | எஸ். மம்தா சிவதர்ஷினி, தூத்துக்குடி |
| 6 | | 3–ம் இடம் | எஸ். ஜி. தேவி மகராசி, திருநெல்வேலி |

இந்நிகழ்ச்சியில் டாக்டர். ராஜேந்திர குமார், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அவர்கள் முன்னிலை வகிக்க, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள், பயிற்றுநர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

2016 – 17 ஆண்டிற்கான மாநில அளவிலான நீச்சல் போட்டிகள் 11.01.2017 அன்று சென்னை வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் நடத்தப்பட்டு வருவதில் மொத்தம் 550 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அணி மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

ஒ–ம்/. ராஜேந்திர குமார்
முதன்மைச் செயலர் /
உறுப்பினர் செயலர்.